Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : STC.No.311/2023 | | |
| Witness for Complainant | : PW2- Chief and Cross | | |
| Name | : சுரேஷ்குமார் | Taluk | : ஊத்தங்கரை |
| Father's / Husband Name | : சேட்டு | Calling : | |
| Village | : | Age : | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 25.03.2026.

துவக்க நேரம்- 4.20 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் புதுக்காடு கிராமத்தில் குடியிருந்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பழனிச்சாமி எனது மாமா ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும். ஓரே ஊர்காரர். ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு இரவு 9.00 மணியளவில் வெங்கடாதாம்பட்டி அருகே இருசக்கர வாகனத்தில் வரும்போது 7176 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் வந்தபோது விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் எனக்கும் தலையில் லேசாக காயம் ஏற்பட்டது. என் மாமாவிற்கு தலையில், கையில் காயம் ஏற்பட்டது. யாருடைய தவறால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் சரியாக சொல்ல முடியாது. நாங்களும் எதிரியும் சமாதாமாகிவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய கோரப்பட்டு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் , குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 08.09.2022 ம் தேதி இரவு குமாரும், அம்மாசியும் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி என்னை தலை மீது அடித்து

காயப்படுத்தினார்கள் என்றும், இதனை கேள்விப்பட்ட எனது மாமா பழனிச்சாமி அவரது TN 24 AP 7176 Splendor Bike ல் என்னை உட்காரவைத்து ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தபோது இரவு சுமார் 10.00 மணிக்கு மேல் இருந்தபோது வெங்கடதாம்பட்டி வேகத்தடையில் பிரேக் அடித்தபோது எங்களுக்கு பின்னால் வந்த TN 24 AT 1393 பிக்கப் வண்டியை ஓட்டி வந்த அம்மாசி என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வண்டியை ஓட்டி வந்து பைக்கின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் என் மாமா பழனிச்சாமி நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டார் என்றும், அவருக்கு இடது கண் புருவத்தின் மேற்பகுதியில் ரத்த காயமும், இடது பக்க தோள் பட்டையில் இடகை கை முட்டி, இடது கால் முட்டி சிராய்பு காயமும் வலது பக்க தோள் பட்டை இடது கால் பாதத்தில் உள் காயம் ஏற்பட்டது என்றும் அதன் காரணமாக அரசு மருத்துவமனைக்கு வந்து கிசிச்சை பெற்றார் என்றும், போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரியுடன் சமாதானமாக சென்று விட்டதால் எதிரியை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை.

முடிவு நேரம்– 4.35 PM

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

Judicial Magistrate
Uthangarai.